1975 நவம்பர் 5]

மாண்புமிகு திரு. மன்னை. ப. நாராயணசாமி: தலைவரவர்களே, மானியம் என்று எதிலிருந்து எடுத்துக் கொடுப்பது என்று புரிய வில்லை. ஆகவே, 100 எக்கர்கள் என்று வைத்து, அந்தச் சங்கத்தில் கடனை வாங்கி விவசாயம் செய்து அந்தக் கடனைக் கட்டிவிடும் வகையில், அவர்களுக்கு வருமானம் கிடைக்கக்கூடிய வகையில் காரியமாகச் செய்ய முடியுமே தவிர, பரந்த இந்தத் திட்டத்திலே மானியமாகக் கொடுத்து உதவி செய்ய சர்க்காரின் நிதிநிலை போதாது.

திரு. வீ. பழனிவேலு: தலைவரவர்களே, இந்தச் சங்கம் நீர் வளம் உள்ள பகுதியில் மட்டும் ஏதுவாக இருக்கிறது. வறட்சிப் பகுதிகளான சேலம், கோவை போன்ற மாவட்டங்களில் இம் மாதிரி சங்கங்கள் செயல்பட முடியவில்லை. இப்படிப்பட்ட வறட்சி மாவட்டங்களிலெல்லாம் இந்தச் சங்கத்தைப் பயன் படுத்த முடியாமல் இருக்கும் நிலைமை அரசாங்கத்திற்குத் தெரியுமா? ஆகவே, நிலத்தடி நீர் கிடைக்காத இடங்களில் அங் கங்கே சிறு குட்டைகளை அமைக்கவோ அல்லது வேறு ஏதாவது திட்டங்களோ இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மன்னை. ப. நாராயணசாமி: தலைவரவர்களே, இந்தத் திட்டத்தைப் பொறுத்தவரையில் சேலத்தில் அவ்வளவு குறைவாக இல்லை. சேலத்தில் 86 சங்கங்கள் செயல்படுகின்றன, வடார்க்காட்டில் 50 சங்கங்கள்தான் செயல்படுகின்றன, தஞ்சா வூரில் 98 சங்கங்கள்தான் செயல்படுகின்றன. ஆகவே, இந்தத் திட்டத்தைப் பொறுத்தவரையில்தான் பதில் சொல்ல முடியுமே தவிர உறுப்பினர் சொல்லும் யோசனையை வேறு திட்டத்திலே வைத்துப் பரிசீலிக்கலாம்.

கும்முடிப்பூண்டி மீனவர் முறையீடு

*196 வினா.—திரு. கா. வேழவேந்தன்: மாண்புமிகு சமூக நல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப் பாரா—

(அ) கும்முடிப்பூண்டித் தொகுதியில் உள்ள கடலோர மீனவர் களின் மேம்பாடு பற்றிய கோரிக்கை மனுவை அத்தொகுதிச் சட்ட மன்ற உறுப்பினர் 5—8—1974 அன்று அரசுக்கு தந்துள்ளாரா?

(இ) ஆம் எனில், அதன் மீது எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கை கள் யாவை?

மாண்புமிகு திரு. சி. வி. எம். அண்ணுமலை: (அ) ஆம்.

(இ) (1) சுண்ணும்புக்குளம் ஊராட்சி பெரியகுப்பம் வரை கால்வாய் வெட்டித் தருவது பற்றி ஆராய்ந்து மத்திய அரசு உதவி மானியம் கிடைக்க பெருமையினுல் தற்காலிகமாக இச்செயற் குறிப்பு தள்ளி வைக்கப்பட்டுள்ளது.

(2) பாட்டை குப்பம், மதுக்கால் குப்பம், வல்லம்பேடு குப்பம், சுண்ணும்புக்குளம், பெரிய குப்பம் ஆகியவற்றில் வாழும் மீனவர்களுக்கு குடிமனைப் பட்டா, வீடு கட்டிக் தருதல், சாலை அமைத்தல் முதலியவை அரசு பரிசீலனையில் தற்போது இருக்கிறது.

(3) எளாவூரிலிருந்து சுண்ணும்புக்குளம் வரை சாலை அமைப்பது, நிதிப் பற்றுக்குறையினுல் சிறிது காலத்திற்கு தள்ளி வைக்கப்பட்டுள்ளது.

(4) குளிர் சாதனத்திற்குத் தேவையான கட்டிட வேலையின் மறு மதிப்பீடு அரசுக்கு கிடைத்து நிதி வழங்கும் பணி அரசு பரிசீலனையில் இப்பொழுது இருக்கிறது.

(5) மீனவர்கள், மீன்களை சென்னைக்குக் கொண்டு வரும் வாகன வசதி பற்றியும் தீவிரமாக ஆலோசிக்கப்பட்டு வருகிறது.

திரு. கா. வேழவேந்தன்: தலைவரவர்களே, நிதி ஆதாரம் இல்லாமல் இருப்பதால் இவை தாமதத்தில் இருப்பதாக அமைச்சாவர்கள் கூறினுர்கள். குறைந்தபட்சம் ஏற்கனவே தொடங்கிய மீனவர்களுக்கான குளிர் பதன நிலையம் பற்றிய செயற்குறிப்பை விரைவில் முடிக்கவும், கழிமுக மீனவர்கள் தங்கள் படகுகளைக் கரைக்குக் கொண்டுவர அந்தக் கால்வாயை வெட்டித் தரும் பணியையும், ஆக இந்த இரண்டு பிரச்சினைகளையும் விரைந்து முடிக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. சி. வி. எம். அண்ணுமலை: தலைவரவர்களே, நான் ஏற்கனவே கூறியதைப்போல நிதிப் பற்றுக் குறையினுல்தான் இந்தக் கோரிக்கை தள்ளி வைக்கப்பட்டிருக்கிறதே தவிர தவிர்க்கப்பட வேண்டுமென்பதற்காக இவை தள்ளி வைக்கப்பட வேண்டுமென்பது அல்ல. குறிப்பாக, சுண்ணும்புக்குளம் ஊராட்சி, பெரிய குப்பம் வரையில் மீன்பிடி படகுகள் வந்துபோக ஒரு கால்வாய் வெட்டித் தருவது பற்றி கோரிக்கை இத்துறையில் பரிசீலனை செய்யப்பட்டது. இத் திட்டத்தை நிறைவேற்ற 47,000 ரூபாய்

1975 நவம்பர் 5]

செலவில் சைதாப்பேட்டை மண்டலப் பொறியாளரால் திட்டப் பட்ட திட்டத்தை மீனள இயக்குநர் அரசு அனுமதிக்கு அனுப்பி யுள்ளார். நிதிநிலை சரியானதும் செயல்படுத்தப்படும்.

மானாமதுரையிலுள்ள ஊமை, செவிடர் பள்ளி

*197 வினா.—திரு. த. சோனையா: மாண்புமிகு சமூகநல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மானாமதுரையில் கிருத்துவ மதத்தினரால் நீண்ட நாட்களாக நடத்தப்படும் ஊமை, செவிடர்களுக்கான (சுமார் 80 பேர்) பள்ளியை எடுத்து நடத்தும் உத்தேசம் ஏதேனும் அரசுக்கு உள்ளதா?

மாண்புமிகு திரு. சி. வி. எம். அண்ணாமலை: இல்லை.

திரு. த. சோனையா: தலைவரவர்களே, மானாமதுரையில் கிருத்துவ மதத்தினரால் நீண்ட நாட்களாக நடத்தப்படுவது ஊமை, செவிடர் பள்ளி. அதில் சுமார் 80 மாணவர்கள் பாதுகாக் கப்பட்டு பயின்று வருகிறார்கள். ஆனால் அங்கே நிதி நிலைமை சரி யில்லாத காரணத்தால் 80 பேர்களையும் ரோட்டில் விரட்டும் அளவிற்கு நிலைமை மோசமாகிவிட்டது. தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களின் பிறந்த தினத்தில் ஊமைகள், செவிடர்கள் போன்ற ஊனமுற்றோர்களுக்கு உதவி செய்கிறார்கள். எனவே, இந்த அரசு வெளியிலே வருகின்ற அவர்களுக்கு ஆதரவு அளித்து, அவர்களுக்கு இருப்பிடம் தந்து ஆதரிக்குமா என்று அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு திரு. சி. வி. எம். அண்ணாமலை: பேரவைத் தலைவ ரவர்களே, மானாமதுரையில் கிருத்துவ மதத்தினரால் நடத்தப்படும் சி. எஸ். ஐ. நிர்வாகத்தில் ஒன்று முதல் எட்டு வகுப்புகளைக்கொண்ட காது கேளாதோர் பள்ளி நடைபெற்று வருவது உண்மை. அந்தப் பள்ளிக்கு ஏற்கனவே அரசு 1974-75-ல் அனுமதி அளித்தது. தொடர் அங்கீகாரத்திற்கு விண்ணப்பம் செய்திருக்கிறார்கள். அது பற்றியும் கல்வித்துறையைச் சார்ந்த இயக்குநர் பரிசீலித்துக் கொண்டிருக்கிறார். இந்த நிலையில் இந்த இல்லத்தை அந்த கிருத்துவ சி. எஸ். ஐ. ஆல் விட்டு விடப்படும் நிலைமை ஏற்பட்டிருக் கிறது என்று விண்ணப்பம் போடுமேயானால் அரசு அதை ஏற்று நடத்த ஒருப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.